செ.வெ.எண். 08 நாள்: 05.08.2019

**இந்திய இராணுவத்தில் இளைஞர்களை சேர்வது குறித்து ஊக்குவித்தல், முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர் மரணமுற்றோர் அவர்களின் வாரிசுதாரர்களின் குறைகளை நேரில் கேட்டறியும் பொருட்டு இந்திய இராணுவ படைப்பிரிவான பைசெண்ட் டிவிசன் அவர்களின் உத்தரவின்படி 174இ மீடியம் ரெஜிமென்டில் இருந்து 2019-ஆம் ஆண்டிற்கான சைக்கிள் பேரணியை, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 05.08.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

இந்திய இராணுவ படைப்பிரிவான பைசெண்ட் டிவிசன் அவர்களின் உத்தரவின்படி 174இ மீடியம் ரெஜிமென்டில் இருந்து 2019-ஆம் ஆண்டிற்கான சைக்கிள் பேரணி குழுவினர் கிருஷ்ணகிரி மாவட்டம் சிங்காரப்பேட்டையிலிருந்து 04.08.2019 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு துவங்கப்பட்டு மத்தூர், போச்சம்பள்ளி, பாரூர், காவேரிப்பட்டிணம் போன்ற ஊர்களில் மேஜர். ரகுவேந்தர் சிங் மற்றும் இளநிலை படை அலுவலர் நாயப் சுபேதார்.கணேசன் மற்றும் 1.அவில்தார். செந்தில் 2.அவில்தார். சிங்காரவேலு, 3.நாயக். கோவிந்தராஜ்,4. நாயக். தங்கமணி, 5.சிப்பாய். சக்திவேல், 6. சிப்பாய். அழகர்சாமி போன்ற 06 படைவீரர்கள் கொண்ட குழுவினர்களால் இந்திய இராணுவத்தில் இளைஞர்களை சேர்வது குறித்து ஊக்குவித்தல் தொடர்பாக சைக்கிள் பேரணியாக சென்று முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர் மரணமுற்றோர் அவர்களின் வாரிசுதாரர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து விண்ணப்பமாக பெற்றுக் கொண்டு பேரணி குழுவினர் நேற்று மாலை 7.30 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு வந்தடைந்தனர்.

05.08.2019 அன்று காலை10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு,பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் கொடி அசைத்து பேரணியை துவக்கி வைத்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போர் விதவையர்களின் குறைகளை கேட்டறிந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டனர். மேலும், மேற்படி விதவையர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டு பேரணி இறுதியாக வேலூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு இப்பேரணி சென்றது.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திருமதி.பிரேமா, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், ஓய்வு பெற்ற இராணுவ படை அலுவலர்கள் மற்றும் திரளான முன்னாள் படைவீரர்கள் கலந்துகொணடனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.